மட்/ ககு/ பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) - 2020

அத்தியாயம் பதினொன்று (சார்பு வாதம், காள்பொப்பர்)

எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

01. தோமஸ்கூனின் கட்டளைப்படிம மாற்றம் ஒன்றிலிருந்து ஒன்று எவ்வாறான ஒழுங்கு முறையில் இடம்பெறுகின்றது.

1. கட்டளைப்படிமம்→சாதாரணகாலம்→அசாதாரணகாலம் →நெருக்கடி→புரட்சி→கட்டளைப்படிமம்
2. கட்டளைப்படிமம்→அசாதாரணகாலம்→சாதாரணகாலம்→நெருக்கடி→புரட்சி→கட்டளைப்படிமம்
3. சாதாரணகாலம்→கட்டளைப்படிமம்→அசாதாரணகாலம்→நெருக்கடி→புரட்சி→கட்டளைப்படிமம்
4. அசாதாரணகாலம்→கட்டளைப்படிமம்→சாதாரணகாலம்→நெருக்கடி→புரட்சி→கட்டளைப்படிமம்
5. புரட்சிக்காலம்→அசாதாரணகாலம்→சாதாரணகாலம்→கட்டளைப்படிமம்→நெருக்கடி→புரட்சி

02. காள்பொப்பரின் விஞ்ஞானத்திற்கான வரையறைகளில் பின்வருவனவற்றில் எது பொருத்தமற்றது.

1. அனுபவத்திற்கு உட்பட்ட தோற்றப்பாடாக இருத்தல் வேண்டும்
2. வாய்ப்புபார்க்கக்கூடிய எதிர்வு கூறலை கொண்டிருக்க வேண்டும்
3. விலக்குதல் மூலம் முன்னேற்றம் அடையக் கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும்
4. கவர்பாடற்ற சொற்களைக் கொண்டு தெளிவாக கூறுதல் வேண்டும்
5. எடுப்பல்லாத வாக்கியமாகக் காணப்படல்

03. தோமஸ்கூனின் கருத்தில் யாதாயினும் ஒரு விஞ்ஞானத்துறை நன்கு வளர்ச்சியடைந்த விஞ்ஞானமாக அர்த்தம் பெறுவது

1. விஞ்ஞானப்புரட்சி ஏற்பட்டதன் பின்
2. கட்டளைப்படிமம் உருவாகிய நிலையில்
3. முரண்பாடு ஏற்பட்ட நிலையில்
4. கருதுகோள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்
5. சாதாரண காலத்தில்

04. பொப்பரின் நோக்கில் விஞ்ஞானக் கூற்று

1. முக்கோணங்கள் மூன்று கோணங்களை உடையவை
2. பூமி தட்டைவடிவானது
3. ஒன்றில் பூமி தட்டைவடிவானது அல்லது கோளவடிவமானது
4. ஏழைக்கு உதவுவது நல்லது
5. பூமிக்கு மேல் சுவர்க்கம் உள்ளது

05. பொப்பரின் கருத்தில் யாதாயினும் ஓர் கருதுகோள் பொய்ப்பிக்கக் கூடியதாக இருப்பது

1. அனுபவச்சோதனைக்கு உள்ளாவதால்
2. எளிமையாகவும் தெளிவாகவும் அமைவதால்
3. அவதான வாக்கியங்களுடன் முரண்படக்கூடிய தர்க்க ரீதியான ஆற்றலைக் கொண்டிருப்பதால்
4. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதால்
5. புதிய கண்டுபிடிப்புக்களைப் பெறுவதனால்

www.ikou.lk

06. ''முன்னோடி கட்டளைப் படிமம் இரண்டிக்கிடையே பாளமொன்றை நிர்மானிக்க முடியாத, தொடர்புபடுத்த முடியாத பள்ளத்தாக்கொன்று உருவாகுவது'' என்பது

1. அவற்றின் எண்ணக்கருக்களுக்கிடையே அர்த்த ரீதியாக தொடர்பில்லை
2. முன்னைய கொள்கை பொய்ப்பிக்க புதிய கொள்கை உருவாவது
3. உலக நோக்கு மாற்றமுறும்
4. கட்டளைப்படிமம் மாற்றமடைதல்
5. புதிர் விடுவித்தல் முறையாகும்

07. கீழ்வருவனவற்றுள் எது பயரா பாண்ட்டின் நோக்குடன் இணங்கக் கூடியது

1. புவிமையக் கோட்பாட்டில் இருந்து சூரியமையக் கோட்பாட்டிற்கான இடமாற்றத்தின் போது மேலே கீழே என்ற சொற்களின் அர்த்தத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
2. பின்னால் தொடரும் கோட்பாடு முரணானதாக இருக்க கூடாது
3. கட்டளைப்படிம மாற்றம் உலக நோக்கை மாற்றியமைக்காது
4. விஞ்ஞான முறையினால் உண்மை என நிறுவுவதற்குப் பதிலாக பொய் என நிராகரிப்பதாக அமைய வேண்டும்
5. முறையியலில் வெவ்வேறு வகையான நுணுக்க முறைகள் பயன்படுவதில்லை

08. கட்டளைப்படிமத் தொடர்ச்சிக்குள் பணிபுரியும் விஞ்ஞானிகள் அக் கட்டளைப் படிமத்தில் வழியே தொடர்பாடலை நடத்துவது கடினமானது என்ற கூனின் கருத்தைப் புலப்படுத்துவது

1. சாதாரண விஞ்ஞான வளர்ச்சியும் புரட்சிக்கால விஞ்ஞான வளர்ச்சியும் வேறுபட்டது
2. கட்டளைப்படிம மாற்றம் விஞ்ஞானிகளின் நோக்க பார்வையை மாற்றியமைக்கும்
3. ஒரு கட்டளைப்படிமத்திலிருந்து அடுத்த கட்டளைப்படிமத்திற்கு செல்லும் காலம் வேறுபடுவது
4. விஞ்ஞானிகள் தமது கொள்கையை விட்டுக் கொடுக்காமை
5. கட்டளைப்படிமம் மாற்றமடையாது

09. காள்பொப்பரின் கருத்தில் அனுபவ சோதனைக்கு உட்படுத்தக் கூடியதாக இருப்பது

1. 2 + 2 = 4
2. ஆன்மா அழிவில்லாதது.
3. அந்த ஓவியம் மிக அழகானது
4. அவன் வழுக்கை தலையன் அல்லது வழுக்கைத் தலையன் அல்ல
5. நீரில் இரண்டு பங்கு ஐதரசனும் ஒரு பங்கு ஓட்சிசனும் உண்டு

10. குறித்த ஓர் கட்டளைப்படிமத்தில் இருந்து பிறிதொரு கட்டளைப்படிமத்துக்கு மாறுதல் என்பதன் மூலம் கூன் அர்த்தப்படுத்துவது

1. ஓர் விஞ்ஞானி ஆரம்ப கட்டளைப்படிமத்தை விட்டு புதிய கட்டளைப்படிமத்தை பின்பற்ற விரும்புவதாகும்.
2. ஆரம்ப கட்டளை படிமத்துக்கும் புதிய கட்டளைப்படிமத்துக்கும் இடையிலான உடன்பாட்டால் தோன்றுவதாகும்.
3. முரண்பாடுகள் தோன்றியவுடன் நடைபெறும் ஒன்றாகும்
4. உண்மையான கண்டுபிடிப்பை நோக்கி விஞ்ஞானி பயணித்தலாகும்.
5. விஞ்ஞானிகளின் வழமையான செயற்பாடாகும்

www.ikeduk

11. லக்கடோஸின் கருத்தில் பாதுகாப்பு வலயம் என்பது

1. எதிர்கணிய ஆய்வுக்கற்கையை உள்ளடக்கியது
2. குறித்த விஞ்ஞான கோட்பாட்டில் எடுத்துக்கொள்ளப்படும் தற்காலிக ஊகம்
3. ஆய்வு நிகழ்ச்சித்திட்டம்
4. ஏற்றுக் கொள்ளப்பட்ட மையக்கோட்பாடு
5. முதன்மை அம்சம், துணைக்கருதுகோள் மூலம் மையக்கருவைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அரண்

12. கூனின் சார்புவாத முறையியலில் அசாதாரண தோற்றப்பாடுகள் என்பது

1. கட்டளைப்படிமம் பழுதடைந்தவுடன் வருவது
2. புதிய கட்டளைப் படிமம் உருவாக்கப்படுதல்
3. குறித்த கட்டளைப் படிமத்தால் விளக்க முடியாத பிரபஞ்ச நிகழ்வுகள் கண்டறியப்படுதல்
4. புதிய துறைகளில் கட்டளைப்படிமத்தை பயன்படுத்தும் போது
5. பழமை வாதிகளில் இறுக்கமான கருத்துகள் தோற்றம் பெறல்

13. போல் பையரபாண்ட் அராஜக கோட்பாடானது

1. அரசியலில் உள்ள அராஜகத் தன்மையைக் கொண்டது
2. கோட்பாடுகள், கருவிகள், ஆய்வு முறைகளைப் புதுப்பித்துக் கொள்ள முடியாது எனக் கூறுகிறது
3. விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு துணைபுரியும் மானிட நேயக் கோட்பாடாகும்
4. விஞ்ஞானத்துக்கு ஒரு முறை ஒன்று எனக் கூறுகின்றது.
5. நிச்சயிக்கப்பட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டமைகின்றது.

14. கார்ள்பொப்பரின் பொய்ப்பித்தல் முறையியலின் அடிப்படையாக அமைந்தது

1. தொகுத்தறி பொதுமையாக்கம்
2. எண்ணீட்டுத் தொகுத்தறி
3. காரணப் பகுப்பாய்வு
4. விதித்து விதித்தல் விதி
5. மறுத்து மறுத்தல் விதி

15. சார்புவாதிகளின் படி இரண்டு அடுத்தடுத்த கட்டளைப்படிமங்களுக்கு இடையே தீர்ப்புச் சோதனை சாத்தியமில்லை ஏனெனில்

1. அடுத்து வருகின்ற கட்டளைப் படிமத்தினுள் அதற்கு முந்தைய கட்டளைப்படிமம் உள்ளடங்கி இருக்கும்.
2. குறித்த இரண்டு கட்டளைப்படிமங்களும் இணைப்பாக்கம் அற்றவையாகவும் சுயாதீனமான அவதான மொழியினைக் கொண்டிராதவையுமாகும்.
3. தீர்ப்புச் சோதனைகளின் பெறுபேறுகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை
4. கட்டளைப்படிம மாற்றம் தர்க்க ரீதியானதை விட மாற்றமுறுகின்றதன் அடிப்படையின் மீது நிகழக்கூடியதொன்றாகும்.
5. முறை என எதுவும் அமையலாம்.

www.ikeju.lk